தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீடு

**உரிமையியல் நீதிபதி முதனிலைத்தேர்வு முடிவு:**

தமிழ்நாடு மாநில நீதித்துறை பணியில் அடங்கிய உரிமையியல் நீதிபதி பதவிக்கான 176 காலிப்பணியிடங்களுக்கு 24.11.2019 அன்று முதனிலைத்தேர்வு நடைபெற்றது. இதில் 7,942 தேர்வர்கள் கலந்துகொண்டனர். இதற்கான முடிவுகள் இன்று வெளியிடப்பட்டு 248 தேர்வர்கள் முதன்மை எழுத்துத் தேர்விற்குத் தற்காலிகமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். சான்றிதழ் சரிபார்ப்பிற்கு தற்காலிகமாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் தங்களது சான்றிதழ்களைத் தேர்வாணைய இணைய தளத்தில் அரசு கேபிள் டிவி நிறுவனம் நடத்தும் அரசு இ-சேவை மையங்கள் மூலமாக 07.02.2020 முதல் 14.02.2020 க்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும். தகுதியான தேர்வர்களுக்கான முதன்மை எழுத்துத்தேர்வு 28.03.2020 மற்றும் 29.03.2020 ஆகிய நாட்களில் முற்பகல் மற்றும் பிற்பகலில் நடைபெறும்.

**ஒருங்கிணைந்த பொறியியல் பணிக்கான கலந்தாய்வு:**

29.05.2019 நாளிடப்பட்ட அறிவிக்கை மூலம் வெளியிடப்பட்ட 733 உதவிப் பொறியாளர் பதவிக்கான தேர்வு 10.08.2019 அன்று நடத்தப்பட்டு இதற்கான தேர்வு முடிவுகள் 19.12.2019 அன்று வெளியிடப்பட்டது. தகுதியான 1491 தேர்வர்களுக்கு 03.01.2020 முதல் 28.01.2020 வரை நேர்முகத்தேர்வு நடைபெற்றது. இதற்கான தரவரிசைப் பட்டியல் இன்று (31.01.2020) வெளியிடப்பட்டது. தரவரிசைப்படி தகுதியான தேர்வர்களுக்கான கலந்தாய்வு 06.02.2020 முதல் 08.02.2020 நடைபெறவுள்ளது. இதற்கான அழைப்பாணை தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**தொகுதி - 2 கலந்தாய்வு:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-2 ல் உள்ள 1334 பதவிகளுக்கான முதனிலைத்தேர்வினை 11.11.2018 அன்றும் முதன்மை எழுத்துத் தேர்வினை 23.02.2019 அன்றும் நடத்தியது. இதற்கான முடிவு 23.10.2019 அன்று வெளியிடப்பட்டது. தகுதியான 2667 விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். இவர்களின் தரவரிசைப் பட்டியல் 30.11.2019 அன்று வெளியிடப்பட்டது. தகுதியான விண்ணப்பதாரர்கள் 10.02.2020 முதல் 15.02.2020 வரை நடைபெறவுள்ள கலந்தாய்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதற்கான அழைப்பானை தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

நாள்: 31.01.2020 செயலாளர்